**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.213/2022**

**வா.சா. –1– சேதுராமன்**

**நாள். 18.03.2025**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது சொந்த ஊர் பழக்கனூத்து கிராமம் ஆகும். சின்னச்சாமி என்பவர் செம்மடைபட்டியை சேர்ந்தவர். நான் 1996 ல் இருந்து செம்மடைப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் 1986 முதல் பால் கறந்து வியாபரம் செய்து வருகிறேன். சின்னச்சாமி என்பவர் எவ்வாறு பழக்கம் என்றால் ரொம்ப நாளாக தெரியும், அவரின் வீட்டில் பால் கறந்து வருகிறேன். 2017 முதல் 2020 வரை சின்னசாமி வீட்டில் பால்கறந்து வருகிறேன். அவர் 6 மாடுகள் வைத்துள்ளார். 6 மாட்டுகளும் மாதம் சுமார் ரூ.30,000/– வரை பால்கறக்கும். 2020 வரை கறவை தொகையை ஒப்படைத்துவிட்டேன் என்றால் சரிதான். சின்னச்சாமி என்பவர் 2020 ல் இறந்துவிட்டார். அவர் இறந்த பின்னரும் பால் கறந்து வந்தேன் என்றால் மாட்டை விற்றுவிட்டார்கள். சின்னசாமிக்கு நிலங்கள் உள்ளதா என்றால் கூட்டு சொத்தாக உள்ளது. ஆனால் யார் யாருக்கு பாத்தியபட்ட சொத்து என்பது தெரியாது. அவருக்கு பாத்தியபட்ட சொத்து சுமார் 10 ஏக்கர் இருக்குமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சின்னசாமி இறப்புக்கு முன்னர் வரை தோட்டத்தில் விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான். தாவா புரோநோட்டு வழக்கானது 2 புரோநோட்டுகள் பூர்த்தி செய்து தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா 2 புரோநோட்டுகளும் தலா ரூ.4,00,000/– க்கு பூர்த்தி செய்துள்ளோம். மேற்படி நோட்டை வடிவேல் என்பவர் பூர்த்தி செய்தார். வடிவேல் என்பவர் எனக்கு நல்ல பழக்கம். வழக்கு தாக்கல் செய்வதற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்னர் பூர்த்தி செய்தேன் என்றால் 2019 ல் பூர்த்தி செய்தேன். பணம் கொடுத்த தேதியில் பூர்த்தி செய்தேன். மேற்படி தொகையானது எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். பணம் கொடுத்த போது நான், சாட்சிகள் இரண்டு பேர், பணம் வாங்கி கொடுத்தவர் மற்றும் சின்னசாமி இருந்தார்கள். தாவா புரோநோட்டு பூர்த்தி செய்ய விபரங்கள் நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் ரூ.8,00,000/– பணம் கொடுத்தேன். ரூ.8,00,000/– ஒரே நாளில் ஒரே நேரத்தில் கொடுத்ததாக சொல்கிறேன். ஏன் 2 புரோநோட்டு பூர்த்தி செய்தேன் என்றால் அவர் இரண்டு புரோநோட்டுகள் எழுத சொல்லி ஒவ்வொன்றாக கொடுத்து கணக்கு தீர்த்து விடுவதாக சொன்னதால் 2 புரோநோட்டுகளில் பூர்த்தி செய்தேன். புரோநோட்டில் சாட்சி கையொப்பம் செய்துள்ள பாண்டி என்பவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் நல்ல பழக்கமானவர். பணம் கொடுத்தாக சொல்லும் நேரத்தில் சின்னசாமியின் மனைவி

1 ஆம் பிரதிவாதி மற்றும் 3,4 பிரதிவாதிகளுக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பணம் கொடுத்த விபரம் குறித்து பிரதிவாதிகள் வீட்டில் நான் பால் கறந்து கொண்டிருந்ததால், பிரதிவாதிகளிடம் சொன்னேனா என்றால் அது பற்றி சொல்லவில்லை. பணம் கொடுத்ததாக தேதிக்கு பின்னரும் நான் மாதம் மாதம் பால் காசு கொடுத்து வந்த நிலையில் வட்டி மற்றும் அசலுக்கான தொகை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் வட்டி கேட்டேனா என்றால் கேட்டேன் அவர் சிரமம்மாக இருப்பதாக சொன்னார். 1 ஆம் பிரதிவாதியின் மருமகன் பைனான்ஸ் செய்து வருகிறறா என்றால் பைனான்ஸ் தொழில் செய்து வருவதாக சொல்கிறார்கள், அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சின்னசாமி என்பவர் என்னிடம் எந்த கடனும் வழங்கவில்லை என்றால் சரியல்ல. சின்னசாமி என்னிடம் கடன் வங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் உள்ள கையொப்பம் சின்னசாமியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. உண்மையாக நான் பணம் கொடுத்திருந்தால் மாதம் மாதம் வட்டி பெற்றிருப்பேன் என்றாலும், பணம் கொடுக்கததால் தான் சின்னசாமியிடம் நான் வட்டி பெறவில்லை என்றால் சரியல்ல. நான் சின்னசாமியின் இறப்பிற்கு பின்னர் தான் மேற்படி சின்னசாமி கடன் பெற்ற விபரத்தினை பிரதிவாதிகளிடம் சொன்னேன் என்றால் சரிதான். உண்மையில் கடன் கொடுத்திருந்தால் பிரதிவாதிகளின் வீட்டில் பால் கறந்து வந்த நான் சின்னசாமி கடன் பெற்ற விபரத்தை சொல்லியிருப்பேன் என்றாலும், கடன் கொடுக்கததால் தான் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் உள்ள கையொப்பம் சின்னசாமியின் கையொப்பம் இல்லை என்றாலும், பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக தாவா புரோநோட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டிகளில் உள்ள ஸ்டாம்பில் மேலும் அதற்கு கீழும் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி கையொப்பங்களில் வித்தியாசம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி கையொப்பம் சின்னசாமியின் கையொப்பம் என்பதை நிருபிக்க நான் தயாராக இருக்கிறேன். 2 ஆம் பிரதிவாதியின் கணவருக்கும் எனக்கும் இடையே உள்ள மனவருத்தத்தின் காரணமாக கொண்டு தாவா புரோநோட்டை உற்பத்தி செய்து பிரதிவாதிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யதுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டு பொய்யாக உற்பத்தி செய்துள்ளதால் தாவாவில் நான் கூறியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this

contains a full and true account of the statement Made by the witness.

G SARAN
Digitally signed by G SARAN
Date: 2025.03.18 16:08:23 +0530

Additional District Judge(FAC),

Dindigul.